orientation
orientamento
berufsberatung
.ch

Informationen in anderen Sprachen
Informations en langues étrangères
Informazioni in lingue straniere

# தொடர்ந்து கற்பதுடன் மொழியறிவு

நீங்கள் உங்களது பாடசாலைக்காலம் மற்றும் தொழிற்கல்வியை வெளிநாட்டில் கழித்தீர்களா அதேவேளை தற்போது சுவிசில் வேலை தேடுகின்றீர்களா? அல்லது நீங்கள் சுவிசில் தொடர்ந்து உயர்கல்வி கற்கப்போகின்றீர்களா?

## „Parlez-vous français?“ „நீங்கள் டொச் கதைப்பீர்களா?“ „Parla italiano?“

நீங்கள் ஒரு வேலை தேடுகின்றீர்களா அல்லது இன்னுமொரு உயர்கல்வியைக் கற்க விரும்புகின்றீர்களா, பரவாயில்லை: இதற்கு உள்ளூர் மாநில மொழியைத் தெரிந்திருப்பது ஒரு முக்கிய நிபந்தனையாக உள்ளது. சுவிசில் நான்கு உத்தியோகபூர்வ மொழிகள் உள்ளன. டொச், பிரெஞ்சு, இத்தாலியம், றொமானிஸ் (Rumantsch grischun).

நீங்கள் டொச் பேசும் பகுதியில் வாழ்வீர்களானால்: உயர் டொச் பேச ஆரம்பியுங்கள்! அதன்மூலம் பின்பு சுவிஸ் டொச்சை விளங்கிக் கொள்ளவும் - அல்லது கதைக்கவும் உங்களுக்கு ஒரு நல்ல அடித்தளம் இடுவீர்கள்.

ஒரு உதவியாளராகத் தொழில் செய்வதற்கு, நீங்கள் அந்தந்த மொழிகளை விளங்கிக்கொள்ளவும் குறைவான அளவில் பேசுவதற்கும் இயன்றால் போதுமானது. அத்துடன் உதவியாளராக தொழில் செய்யும்போது காலம் செல்லச்செல்ல மேலும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றது, அதாவது உங்களுக்கு ஓரளவு வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும், அதேவேளை நீங்கள் ஒரு பொறுப்பான வேலையை செய்ய விரும்பினால் உங்களுக்குத் தெளிவான முறையில் சிறந்த மொழியறிவு இருத்தல் வேண்டும். தொடர்ந்து உயர்கல்வி கற்கவோ அல்லது பல்கலைக்கழகத்திற்கு செல்ல விரும்பினால் நீங்கள் சிக்கலான பந்திகளை வாசிக்கவும் விளங்கிக்கொள்ளவும் அத்துடன் இவ்வாறான பந்திகளை எழுதவும் தெரியவேண்டும்: உங்கள் குறிக்கோளைப் பொறுத்து உங்களுக்கு வெவ்வேறான மொழித்தரம் இருத்தல் வேண்டும். ஆகவே உங்கள் குறிக்கோளை அடைவதற்கு உங்களுக்கு எவ்விதமான மொழிவகுப்பு தேவை என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இதைவிடவும்: சுவிசில் தொழில் அல்லது உயர்கல்வியைத் தொடர்ந்து கற்பதற்கு மட்டும் மொழி முக்கியமானதல்ல. அத்துடன் வேறு வாழ்க்கை நிலைமைகளிலும் மொழியை அறிந்திருப்பது உதவிபுரியும்: அயலவர்களுடன் கதைப்பதற்கு, கொள்வனவின்போது, ஆசிரியர்களுடன் அல்லது வைத்தியர்களுடன் கதைப்பதற்கு, படிவங்களை நிரப்புவதற்கு, அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களுடன் தொடர்புகொள்வது போன்றவைகள்.

மொழி வகுப்புகள் குறித்து இணையத்தளத்தில் நீங்கள் ஒரு பார்வையைச் செலுத்தலாம்.

டொச்சில்: www.berufsberatung.ch > Aus- und Weiterbildung > Fremdsprachen > Suche

பிரெஞ்சில்: www.orientation.ch > Formations > Apprendre une autre langue > Recherche

இத்தாலியத்தில்: www.orientamento.ch > Formazioni > Corsi e soggiorni linguistici > Ricerca

மொழி வகுப்புகள் குறித்த மேலதிக தகவல்களை தொழில் ஆலோசனை நிலையத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.